29

பொய்யாமொழி

ஆசிரியர் — ப. பாஸ்கரனார்.

14 NOV 1950 MADRAS
544/50

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, ஐப்பசி 2 (18—10—50) புதன்கிழமை. | மணி 8

எதனாலேயோ!

புலவர். ப. அரங்கசாமி.

★

1. நெடுங்காட்டைத் திருத்திவிளை நிலங்க ளாக்கி
நெல்வாழை கரும்பெனவே பயிருண் டாக்கிக்
கொடுங்கானம் குளிரும்வகை நீரைப் பாய்ச்சிக்
குளிர்சோலை பொழில்பூங்கா என்றுண் டாக்கி
அடுபோர்கள் பலவென்று அரசுண் டாக்கி
அன்புநெறி வாழ்ந்திட்டத் தமிழர் இந்நாள்
தடுமாறித் தத்தளித்து மானம் இன்றித்
தரித்திரராய் வாழும்நிலை எதனா லேயோ!

2. நல்லதொரு வகையாலே நிலத்தை ஆய்ந்து
'நானில'மாம் என்றதொரு பெயருந் தந்து
மெல்லமெல்ல நிலத்தியல்பை மேலும் ஆய்ந்து
மிகு'பாலை' என்பதொரு வகையுங் கண்டு
எல்லையிலா நிலப்பரப்பை இனிதே யாக்கி
ஏற்றமொடு வாழ்ந்திட்டத் தமிழர் இந்நாள்
பல்லைபிற ரிடத்தினிலே இளித்துக் காட்டிப்
பரிதாப நிலையுற்ற தெதனா லேயோ!

3. நாகரிகம் என்னவென்றே அறிய வொண்ணா
நாட்களிலே நாகரிகம் அதனைக் கண்டுத்
தேகமதை மூடுவற்கு' ஆடை இன்றித்
திரிந்தபல நாட்டினர்க்கும் ஆடை ஈந்து
யாகம்செய் ஆரியர்தம் செயலைக் கண்டு
அறிவீனம் என்றழித்தத் தமிழர் இந்நாள்
சோகமுறும் உருவோடும் உள்ளத் தோடும்
சுற்றிச்சுற்றித் திரிந்திடுவ தெதனா லேயோ!

4. 'அறிவியலின்' ஆராய்ச்சி அளவில் லாமல்
அயல்நாட்டில் செய்துவரும் நாளில், இங்கே
குறியதனை நெற்றியினில் போடும் போது
குறுக்களவு நெடுக்களவு எல்லை ஆய்ந்து
வெறிமதநீர் யானைபதற் கிடுதற் கேற்ற
வடகலைதென் கலைநாமம் இவற்றை ஆய்ந்து
பொறியைந்தும் அடக்கும்வகை அதனை ஆய்ந்தும்
போர்க்கோழை எனவாழ்வ தெதனா லேயோ!

5. இயற்கையினில் நிறைந்துள்ள எழிலைக் கண்டு
'இறை'யென்றே வணங்கிட்டத் தமிழர், இந்நாள்
செயற்கையினில் கற்களினால் செதுக்கப் பட்ட
சிறுதெய்வ வணக்கமெலாம் செய்தே நின்று
அயர்ச்சியொடு அறிவிழந்து மானம் இன்றி
ஆரியரை 'சாமி'யென்றும் அழைத்தே நின்று
முயற்சியொடு உணர்ச்சியொடு சிறிதும் இன்றி
மூங்கையர்போல் வாழும்நிலை எதனா லேயோ!

6 காவிரிக்கு வளமான கரையுங் கட்டிக்
கல்லணையுங் கட்டுவித்தத் தமிழர், மற்றும்
கோவில்பல கட்டுவித்தார் அவற்றி னுள்ளே
குடிகொண்ட எலிக்கூட்டம் அதனைப் போல
மேவியொரு கூட்டந்தான் புகுந்துக் கொண்டு
மிகுமானத் தமிழனைத்தன் அடிமை யாக்கிக்
கூவிடுங்கால் சூத்திரனே எனவுங் கூறிக்
கும்மாளம் அடிக்கும்நிலை எதனா லேயோ!

வார இதழ். ★ விலை அணா 1

வாழ்த்து செய்திகள்.

D. A. K. சாமி,
வடுகபாளையம்.

திருவாளர் பாஸ்கரனுர் அவர்களுக்கு வணக்கம்பல.

தாங்கள் அன்புடன் அனுப்பிய "பொய்யாமொழி" இதழ் வரப்பெற்றேன். தெய்வப்புலவர் அருளிய தமிழ் வேதமாகிய அந்நூலின் பெயரைக் கொண்ட இவ்விதழ், நம் தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லறிவை உண்டாக்குமென்று பெரிதும் நம்புகிறேன். ஆரம்பத்திலேயே அமைந்துள்ள அதன் நடையின்போக்கு அவ்வாறு நம்புவதற்கு இடமளிக்கிறது. இதுவே "பொய்யாமொழி" யென்ற அதன் பெயர்கேற்க பொய்யாகிய உலகில் என்றும் தளர்வடையாது முன்னேற்றத்துடன் உலவி, தமிழகத்தில் மிகப்புகழுடன் விளங்கி, மக்களை மகிழ்விக்குமாறு அருள் புரிவாரெனக் கடவுளை மனமார வாழ்த்துகிறேன். அறிவு வளர்க்கும் இத்தமிழணங்கை புதிய முறையில் தோற்றுவித்த தங்கள் பெருமுயற்சிக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

ஃ ஃ ஃ

G. ராகவன்,
தி. மு. கழகச் செயலாளர், ஆயுதகலம், உள்கோட்டை.

அன்புடையீர்! ஆசிரியர் அவர்கட்கு வணக்கம்.

விவசாயிகளின் குறைபாடுகளை அரசியலாருக்கு எடுத்துக்காட்டி வள்ளுவர் குறள் வழி வகுத்து நாட்டுக்கு நலம் பல செய்யவும். பல நூற்ருண்டுகளாக அன்னியர்களுக்கு அடிமைப்பட்டு சாத்திரசம்பரதாயமெனும் மூடப்பழக்கவழக்கங்களில் ஆழ்ந்து கிடந்த நம் சமுதாயத்தை அடிமையெனும் கோட்டையிலிருந்து அகற்றி அறியாமையைபோக்கி அறிவுடமையை யூட்டி திராவிடர்கள் வாழ்வை வளம் பெறச்செய்ய உதவும் ஏடு பொய்யாமொழி. அது கண்டு மகிழ்ச்சி.

ஃ ஃ ஃ

G. ரத்னம்,
ஆசிரியர், எலக்தக்குடம்.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்

தாங்கள் எனக்கு அனுப்பிவரும் பொய்யாமொழி என்னும் வார இதழ் பத்திரிகையைப் படித்து வருகிறேன். பத்திரிகை என்பது காலத்தின் கண்ணுடி! மக்களின் வாழ்க்கையை மாண்புறச்செய்யும் நீதிபதி அநீதியைக் கண்டித்து தேசத்தைக் காக்கத் தொண்டு செய்துவருவது அதன் கடமை என்ற பேரறிஞர்களின் பொன் மொழிக்கேற்ப தங்களின் வார இதழ் மக்கள் மன்றத்தில் மாண்புடன் விளங்குவது பார்த்துபேரானந்தம் அடைகிறேன். கிராம மக்களின் குறைகளை எடுத்துக்காட்டி அதை நிவர்த்தி செய்ய வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை, உங்கள் வாரஇதழ் பூதலமீது புகழ்பெற்றுய்ய பல நூற்றுண்டு வாழ்க!

K. குஞ்சிதபாதம்,
நாதஸ்வரம், தேஹர்.

ஆசிரியர் அவர்களுக்கு வணக்

தங்களால் வெளியிடப்படும் வார இதழாகிய பொய்யாமொழியை கண்ணுற்று நான் மிகவும் களிப்புற்றேன். தாங்கள் தற்போது நாட்டில் நிலவிவரும் உண்மைக் கருத்துக்கள் வெளிதோன்ற தங்கள் பத்திரிகையில் பிரசுரம்செய்யும் தங்களுக்கு என் நன்றி இவ்வார இதழில் பெண்கள் பகுதியில் எழுதியிருக்கும் கட்டுரை தற்கால நாட்டின் நடப்பிற்கும் துரைத்தனத்தாரின் போக்கிற்கும் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது. தங்கள் பொய்யாமொழி மக்களை நாட்டின் முன்னணிப் பாதைக்கு கொண்டுசெல்லும் ஓர் அரிய சாதனமாகும்.

வாழ்க! பொய்யாமொழி. வளர்க! நல் கருத்துகள்.

ஃ ஃ ஃ

G. P. நாதன்,
நியூஸ் ஏஜண்ட், மேப்பமூர்.

அன்பார்ந்த ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம்.

தங்களை ஆசிரியராகக் கொண்டு பொய்யாமொழி வெளிவருவது கண்டு மிக்க மகிழ்வெய்துகிறேன். பெயர் கேற்ப பொய்யாமொழியானது பொய்யாமொழியாகவே வெளிவரும் என்று நம்புகிறேன் "பொய்யாமொழி" என்றும் நிலைத்து பணிபுரிய என்மனமார்ந்த வாழ்த்தை அன்புடன் அறிவிக்கிறேன். வாழ்க! வள்ளுவன் மொழி.

ஃ ஃ ஃ

S. சந்திரசேகரன்,
குணவாசல், ஓமாம்புலியூர் P. O.

வணக்கம்.

அன்புமிக்க நண்பர் ஆசிரியர் அவர்களே தமிழ் நாட்டில் தழைத்தோங்கும் பத்திரிகை இதழ்களுக்கே பொய்யாமொழி முதற்கொழுந்தாய் உள்ளது. ஆகையால் பொய்யாமொழி என்றும் பொன் மொழியாய் ஓங்குக.

பொய்யாமொழி ஒன்று புவனமதில் தான்எழுதி
மெய்யாக காண்பிக்கும் மேலோரே
அய்யாகேள் கையால் ஆகா தகயவர்களை சேர்திருத்த
பொய்யாமொழி ஒன்றே போதுமே.

காண்டா மிருகமொத்த கயவர்களை சேர்திருத்தி
ஆண்டான் அடிமையென்னும் அத்தனையும் தான்ஒழித்து
தீண்டாமை என்னுமதோர் தீயணைக்க
வேண்டாமோ பொய்யாமொழி என்னும் புதுமைத்-
தாள் பூவுலகில் பொய்யாக வேண்டுவதே மேல்.

நீங்கள் பொய்யாமொழியின்
★ ★ ★ சந்தாதாரரா..?
இல்லையேல் இன்றே சேருங்கள்!

...யில் :: வள்ளுவர்.

தி. மா. பரமசிவம்.

★

அரசியலில், அறவுரையில், அன்புடைமையில், இன்பத்துறையில் இன்னும் மற்றெல்லா வழிகளாலும் வியக்கத்தகும் காட்சிதரும் வள்ளுவர் உள்ளம் வறுமை நிலையையும் அப்படியே ஒரு சிறு கதையாக்கித் தருகின்றது.

வறுமைக்குக்காரணம் சோம்பல் என்றாலும், உழைக்கும் அளவுக்கு ஊதியம் கிடைக்காமலிருப்பதும் வாழும் அளவுக்கு வசதியில்லாமலிருப்பதும் பலருக்கு தற்போதைய சூழ்நிலையில் அமைந்திருக்கின்றது.

பற்றாக்குறை ஊதியத்தில் வாழுகின்ற பஞ்சாலைத் தொழிலாளி பாலன் இருப்பது வாடகை வீடு. உடுப்பது கந்தல் ஆடை. அருமை மனைவிக்கும், ஆறு குழந்தைகளுக்கும் தனக்குமாகக் கிடைக்கும் பங்கீட்டு உணவு பதினாறு நாட்களுக்குத்தான் வருகின்றது ஒருமாதத்தில்.

நாற்பது ரூபாய் சம்பளத்தில் நாணயமாகக் காலந் தள்ள விரும்பினான் அவன், குழந்தை வேண்டுமென்று எந்த 'கும்பேசுவரனை'யும் கும்பிட்டதில்லை. இருந்தாலும் குழந்தைபெறத் தவறுவதில்லை அவன் மனைவி. ஆறுபோதும்; ஏழாவது வேண்டாம் என்றுதான் கருதினாள். ஆனால் அவள் நிறைமாதக் கர்ப்பிணி.

இந்த நிலையில் ஆள் குறைப்புத் திட்டத்தின்படி ஆலையிலிருந்து நீக்கப்பட்டான் பாலன். அந்த மாதம் இறுதியாகப் பெற்ற வருவாய் தீர்ந்தது.

மனைவி வேதனைப்படுகிறாள் ஆறாவது சிறுகுழந்தை அழுகின்றது "அம்மா அம்மா" என்று. அடுத்த வீதியிலிருந்த மருத்துவரைப் போய்க் கெஞ்சினான். இருபத்தைந்து ரூபாய் இல்லாமல் இருந்த இடத்தைவிட்டு நகரமாட்டேன் என்று சொல்லிவிட்டார் அம்மருத்துவர். ஆறாத்துயரத்துடன் வீடு திரும்பிய அவன் மனைவியின் அலங்கோல நிலையைக் கண்டான் ஏழாவது குழந்தை இறந்து பிறந்தது. எழில் மனைவியும் மாண்டுவிட்டாள் என்ன செய்வது வறுமையின் கொடுமை?

மணவிழாவிலே மனைவியின் கழுத்திலே அணிவித்தானே அந்தத்தாலி! அதுதான் அன்றைய மரணச் சடங்குக்கு உதவியது. மறுநாள் பொழுது புலர்ந்தது. தாயை இழந்த சேய்கள் துடித்தனர். அப்போதுதான் அவன் எண்ணுகிறான்.

"வறுமைத்துயரால் நேற்று மாண்டுபோனார்கள் மனைவியும் குழந்தையும், இன்னும் வருமோ? அத்தகைய சூழ்நிலை" என்று ஏங்கித் துயரடைகின்றான்

—7ம் பக்கம் பார்க்க

— சென்ற இதழ் தொடர்ச்சி —

மகாபாரதம்

வில்லிதரும் விளக்கம்,

U. S. இராமசாமி பிள்ளை

★

முன்னே விநாயக வணக்கமாகக் கூறிய முதற் செய்யுளில் பாரதகதையை வியாசர் கூறினார். விநாயகர் அதை மேருமலையை ஏடாகக் கொண்டு தனது கொம்பை எழுத்தாணியாக அமைத்து எழுதினார் என்று கூறிய கூற்று ஆராய்ச்சிக்குப் பொருந்துமா? என்பதைக்கவனித்தோம். இப்போது இரண்டாவதாகக் கூறிய விநாயக வணக்கச் செய்யுளைப்பற்றி சிறிது பார்ப்போம்.

அச்செய்யுள்:—

" முருகார்மலர்த் தாமமுடியோனை யடியார் முயற்சித்திறந்
திருகாமல் விளைவிக்குமதயானை வதனச்செழுங் குன்றினைப்
புருகூதன் முதலாய முப்பத்துமுக் கோடிபுத்தேளிரும்
ஒருகோடி பூதேவருங் கைதொழுங்கோவை யுறவுன்னுவாம்"

என்பதாகும்.

இ—பொ. முருகு - மணம் பொருந்திய, ஆர்மலர்-ஆத்திப்பூவினாலாகிய, தாமம் - மாலையையணிந்த முடியோனை - சடைமுடியையுடையவனும், அடியார்—தொண்டர்களது, முயற்சித்திறம் - அன்பின் கொள்கைக்கு திருகாமல் - மாறுபடாமல், விளைவிக்கும் - பயன் தரும் மதயானை—ஆண்யானையின், வதனம் - முகத்தையுடைய செழுங்குன்றினை—அழகிய மலைபோன்றவனுமாகிய விநாயகனை, புருகூதன் - இந்திரனை, முதலாய—தலைவனாகக் கொண்டுள்ள, முப்பத்துமுக்கோடி - முப்பத்து மூன்று கோடியாகக் கணக்கிடப்படுகின்ற, புத்தேளிரும்—தேவர்களும், ஒரு கோடி - ஒரு தொகுதியினராகிய, பூதேவரும்—பிராமணர்களும், கைதொழும் - கைகுவித்து வணங்குகின்ற சிறப்புடைய, கோவை - பிரபந்தமாகிய பாரத நூல் உற- இடையூறில்லாமல் இனிதுமுடிய உன்னுவாம்- இடைவிடாமல் சிந்தனைசெய்வோம் என்பதாம். (எ—று.)

(இதன் பொழிப்பு) மணம் பொருந்திய ஆத்திப் பூவினாலாகிய மாலையையணிந்த சடை முடியையுடையவனும், தொண்டர்களது அன்பின் கொள்கைக்கு மாறுபடாமல் பயன்தரும் ஆண்யானையின் முகத்தையுடைய அழகிய மலைபோன்றவனுமாகிய விநாயகனை இந்திரனைத் தலைவனாகக்கொண்டுள்ள முப்பத்துமூன்று கோடியாகக் கணக்கிடப்படும் தேவர்களும் ஒரு தொகுதியினராகிய பிராமணர்களும் கைகுவித்துவணங்குகின்ற சிறப்புடைய பிரபந்தமாகிய பாரதநூல் இடையூறில்லாமல் இனிது முடிய இடைவிடாமல் சிந்தனை செய்வோம் என்பதாம்.

குறிப்பு:- ஒருநூல் என்றிருந்தால் அதைஉலக மக்கள்யாவரும் போற்றவேண்டும். அங்ஙனம் அமைந்த நூலே உண்மையானதும் உயர்ந்ததுவுமாகும், இங்கு

—தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க

பொய்யாமொழி

ஆசிரியர்: ம. பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, ஐப்பசி 2 புதன். { மணி 8

" அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது "

தர்மத்தில்மிக்க மேன்மை பொருந்திய சமத்துவ இதக்க மனமுடையவனைப் பின்பற்றினல்லாது பிறவியில் வரும் துன்பங்களை கடத்தலரிது.

உணவு பஞ்சமா
அதில் தாட்சண்யம் கொஞ்சமா

★

நமது சென்னை மாகாணத்திலே உள்ள உணவு பஞ்சத்தை எழுதாத ஏடுகளுமில்லை, அதைப்பற்றி நம் மாகாண மந்திரிகளும், வெளி மாகாணம் மத்திய சர்க்காரைப்போய் கேட்காத நாளுமில்லை. நமதுசர்க்கார் உத்திரவில் 6 அவுன்சு அரிசியும் மற்றய 6 அவுன்சு வேறுதானியங்களும் கொடுக்கப்படுகிறது என்று பத்திரிகையில்வரும் விளம்பரத்தைத்தவிர உண்மையில் மக்கள் பெற்றிருக்கிறார்களென்று கூறவே முடியாது.

நடைமுறைவருடத்தில் 2, 3 வாரங்கள்தவிர இந்த ஜெயங்கொண்டம், கீழப்பழூர் போன்ற உடையார்பாளையம் தாலுக்காவிலும் மற்றும் பற்றுக்குறை ஜில்லாக்களிலும்கூட இதேநிலையில் தானிருக்கிறது நம் மாகாண உணவுப்பஞ்சம். ஏன் இப்பேர்பட்ட நிலை? கொடியபஞ்சம் வரக் காரணம். சிந்தித்தால் நஞ்சை விளைவுகள் சில அதிகப்படியான ஜில்லாக்களில் மொத்த ஹோல் சேல் எடுக்க ஒப்புக்கொண்ட வியாபாரிகளிடம் குறிப்பிட்ட அளவு நெல்லை எடுத்து அவர்கள் ஸ்டாக் செய்யும் நெல் மூட்டைகளை மற்றைய பற்றுக்குறை பிரதேசங்களுக்கு அனுப்பும்வரை ஷியார்களே வைத்திருக்கவேண்டியேற்படுவதினால் ஏராளமான முதல் தேவைப்படுவதால் அவர்கள் குறிப்பிட்ட அளவுக்குமேல் நெல்லை பிடித்து ஸ்டாக் செய்ய முடிவதில்லை.

தஞ்சை ஜில... களில் பிளாக் மார்க்கட்டி... 32 ரூ. இன்னும் கரையோரத்தி... மைல்கள் உள்ளே மத்தியில் சென்... ர்...ல் கண்ட்ரோல் விலைக்குமேல் ஒரு சில 2, 3 ரூபாய்களுக்குமேல் விலையில்லை. ஏது அங்கு நெல் என்றால் ஹோல் சேலில் எடுக்க முடியாமல் தங்கிவிட்டிருந்த நெல்லானது பின்னர் பசியும் பஞ்சமும் ஏற்பட்ட பிரதேசங்களுக்கு எப்படியோ கொஞ்சம் கொஞ்சமாய் நகர ஆரம்பத்து கொஞ்சம் அதிக விலையைக்கண்டவர்கள் ஆசையின் மிகுதியால் அவர்களும் நாளடைவில் ஏற்பட்ட அதிகவிலை சவுகரியத்தை நினைத்து புதுவருவாயின் வழியில் இறங்க ஆரம்பமாகியது அது முற்றும் துறந்த முனிவர்களையும் ஆசை விடாதபோது அவர்கள் என்ன செய்வார்கள் பாவம்!

அதுமட்டுமா? குறிப்பாக பொதுமக்களின் பசி பஞ்ச பட்டினியை தங்களிடம் முறையிடுபவர்களை நேரில் காணும் ஜில்லா, டிவிஷன், தாசில்தார், சப்ளை ஆபீசர்கள் உத்தியோகஸ்தர்களின் கொஞ்சநஞ்சமுள்ள ஈவு இறக்கத்தால் ஜாடையாய் அவர்களின் பராமுகம் சட்டபூர்வமான உணவு பங்கீட்டு இடங்களிலும் சர்க்கார் ரேஷன் அளவு 6 அவுன்சு வீதமானால் வெளி B M-ல் 1 M M 1 - 14 —0, 8 அவுன்சு ரேஷனானால் வெளியில் B M 1 M M 1—8—0 10 வீதம் அரிசியானால்.........1 M M 1—2—0 வீதாசாரம் பத்திரிகையில் அளவு உயர விலை குறைகிறது. இதை ஒட்டியே B M நெல்களும் கைமாறுதல்களில (ஆட்டோமெடிக்) வேலைமாதிரி அந்த இயந்திரம் தானே வேலை செய்கிறது. ஏழை மக்கள் வாங்கி சாப்பிட முடியாமலிருக்கிறது. விலை ஏறுவதைத்தவிர வேறில்லை.

அநேகமாக பணம் வருவாய் சுமாராயுள்ளவர்கள் கூடியவரை அரை, முக்கால் வயிறு ஆகாராமுட்கொள்ளுகிறார்கள் ஏழை மக்கள்தான் விலை ஏற்றத்தினால் வாங்க முடியாமல் திண்டாடுகிறார்கள். இதுமாதிரி பஞ்சம் நாட்டிலிருப்பது இயற்கையான பருவமழை கோளாறு மட்டுமே காரணம் என்று பூரவும் ஒப்புக்கொள்ள நியாயமில்லை. எப்படியெனில் சென்ற 1944-45-ல் அட்வைசரி ஆட்சி காலத்தில் சர்க்கார் புள்ளிவிபரப்படி உணவு சாகுபடி செய்த நிலங்களிலிருந்த ஏக்கர் 11,013,580 நிலங்களாகும்.

...கார் புள்ளிவிபரப்படி ... களுடன் பாக்கி வேறு உணவு ... ர மற்றைய கரும்பு, புகையிலை, வாழை போன்ற சாகுபடியில் 900000 ஒன்பது லெக்ஷம் ஏக்கர் நிலங்கள் ஈடுபட்டுளது எனத் தெரிகிறது. அதிலும் புதுக்கோட்டை பகுதிவேறு 48 x 49, 49 x 50 இந்த ஆண்டுகளில் உணவு சாகுபடியில் 101213 நிலங்கள்வேறு சேர்ந்திருக்கிறது. நமது ஸ்ரீ சர்தார் வேதரத்தினம் பிள்ளை சட்டசபையில் கூறிய கணக்குபடி ஒரு தஞ்சை ஜில்லாவிலேயே 94000 ஆயிரம் நிலங்கள் தரிசாய் கிடைக்குமானால் மற்றைய ஜில்லாக்களும் நீர்பாசன வசதியின்றி இருக்குமிடங்களும் சேர்த்தால் 1944 x 1945-ல் பயிரிட்ட நிலங்களைவிட எத்தனை லெக்ஷம் ஏக்கர் நிலங்களை உணவு பயிர் செய்ய ஏற்பாடு செய்யலாம். கரும்பு, புகையிலை போன்ற பயிர்களை ஏன் செய்துவருகிறார்கள்? ஏன் அவ்வாறு செய்யும் எண்ணம் தோன்றுகிறதெனில் அவர்களுக்கும் ஈவு இதக்கம் பச்சாதாபமிருப்பினும் ஏனையபொருள்களைவிட விலை குறைவான இந்த உணவு சாகுபடி செய்வதைவிட செய்து கண்ட்ரோலில் கஷ்டப்படுவதைவிட கண்ட்ரோலில்லாததும் விலை ஏற்றமான பண்டங்களையும் பயிர் செய்யமுற்பட்டிருக்கிறார்கள். ஆகவே விலையேறும் விளை பொருள்களின் விலையை குறைத்து உணவுப்பொருள் விலைக்கு அதிகப்படிக்காக சர்க்கார் கொஞ்ச நஷ்டஈடு கொடுக்கமுன்வந்து கூடியவரை உணவு சாகுபடியையே செய்ய வற்புறுத்தினால் உணவுப் பஞ்சமேது!

பொதுமக்களின் பட்டினியை குறைக்க தைரியமாய் சில சுயநலக்காரரின் தாட்சண்யத்தை தள்ளிவைத்து காரியம் செய்ய சர்க்கார் முன்வருவார்களாயின் உணவுப் பஞ்சம், பசி பட்டினிகள் தலைகாட்டாமல் ஓடி ஒளியும். உணவு கண்ட்ரோல்களே தேவையில்லை. அது சம்மந்தமான ரேஷன் உணவு மந்திரிமுதல் கீழ்த்தரமுள்ள அதற்குள்ளவர்களின் சம்பளங்களே உணவுப்பயிர் செய்பவர்களுக்கும் நஷ்டஈடு தருவதற்கு போதும். அந்த உத்தியோகஸ்தர்களை கொண்டு வேறு இதர துறைகளில் பல முன்னேற்ற காரியங்களுக்கும் பிரயோசனமும் படுத்தலாம். வீணாக சர்க்காரும் உணவுப் பிரச்சினையில் பொது மக்களிடம் கெட்டபெயர் வாங்கிவரவேண்டிய அவசியமும் ஏற்படாது. எப்போதும்நாம் பர்மா போன்ற நாடுகளிடம் 3/8 பங்குவாங்கியே உணவுத்தேவை பூர்த்தியடைந்திருக்கிறது. உணவு உற்பத்தி அதிகம் 3/8 பங்கை பூர்த்தியடையச் செய்தாலே சரியாய்விடும்.

மறைந்த மகாத்மா காந்தியடிகள் 'கண்ட்ரோலை எடுத்துவிடுங்கள்' என்று அடிக்கடி கூறிவந்தார். செய்தோமில்லை. விலையை மட்டும் வரையறை செய்து லைசென்ஸில்லாமல் நெல்லை யார்வேண்டுமானாலும் நெல் வியாபாரம் செய்யலாம், ஆனால் குறிப்பிட்ட வரையறை விலைக்குமேல் நெல் விற்பனை செய்தார் என்று உண்மையான ருசுவிருந்தால் பொதுமக்கள் நெல்லை பறிமுதல் செய்து கொண்டாலும் அதில் சர்க்கார் தலையிடாது என்று ஒரே ஒரு வார்த்தைமட்டும் உபயோகித்தால் பஞ்சமும் பறந்து, விலை உயர்வும் தாழ்ந்துவிடும்.

வரும் தை, மாசி மாதம் முதல் ஓராண்டு காலம்வரையிலாவது துணிந்து செய்து பாருங்கள். சாத்தியமில்லையானால் மறுபடி உங்களிஷ்டபடி செய்யலாம். அதை விட்டு விட்டு நிரபராதிகளானவர்களாகிய ஏழை மக்கள் பட்டினிச் சாவு ஏற்படுகிறது என்னும் பழியை ஏன் ஏற்றுக்கொள்ளவேண்டும். இதுமாதிரி பழிகளை ஏற்றுக் கொள்வதைவிட சர்க்கரை போன்ற மற்ற மற்றைய சாமான்களை கொஞ்சநாளைக்கு வெளிநாட்டிலிருந்து தருவித்து சுயதேவை பூர்த்திக்கு பின் சர்க்கார் சர்க்கரை, புகையிலைபோன்ற வஸ்துக்களுக்கு பாதுகாப்பளியுங்கள். வீணாக ஏழைமக்களின் உயிரை மாய்க்கும் இந்த உணவுப் பஞ்சத்தை ஒழிக்க “ஒரு சிலரின்” தாட்சண்ணியத்தை தள்ளிவையுங்கள். யோசித்து பொது மக்களுக்கு நல்ல தீர்ப்பு அளியுங்கள் என்று வேண்டி முடிக்கிறோம். சில வாரங்களாய் பட்டினி அதிகம். ஏழை மக்களுக்கு வாரத்தில் 3 நாளைக்குமேல் உணவுதானியங்கள் கிடைக்கவில்லை. இப்படியே எத்தனைகாலம் பஞ்சம், பட்டினியை மக்கள் பொறுப்பது? எங்ஙனம் இயலும்?

> “தனியொரு மனிதனுக் குணவில்லை யெனில்
> ஜகத்தினை அழித்திடுவோம்”

என்ற பாரதியின்வாக்கை சிந்தியுங்கள். பல கோடி மக்களுக்கு உணவு இல்லையெனில் என் செய்வது! சிந்தித்து ஆவன செய்யுங்கள்,

★

மாதர் பகுதி.

(1)

நம் நாட்டில் வாழும் மக்களில் ஒரு பகுதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் குறிப்பாக, ஆண்களை விட அதிகமாக எல்லாவகையிலும் வாழ்க்கையில் சங்கடத்தையனுபவிப்பவர்களும், பெண்கள் ஆனால் அவர்களின் இயற்கை நோய் நொடிவு. பிரசவத்திற்குரிய வசதிகள் எல்லா ஊர்களில் ஏன் 5000-மக்களைக் கொண்டதும், கிட்டத்தட்ட ஒரே கிராமங்களில் மாதந்தோறும் 2முதல் 3பிரசவங்கள் வரை நடந்தும் வருகிற கிராமம் சிறு சிறு நகரங்களிர கூட மருத்துவஉதவியின்றி தாலுகா தலைநகர் 400 சதுல் மைல்களும் கிடடத்தட்ட மூன்றுலட்சத்துக்கு மேற்பட்ட மக்களையும் கொண்ட கிராமங்களுக்கு ஓரிடமாக வைத்திய உதவியும், மருத்துவ உதவியும், சிலசமயம் அந்தமருத்துவ உதவி செய்யும் நர்ஸுகள் கூட வைக்கப்படாமலுமிருந்து வருகின்ற நம் நாட்டு நிலையை எண்ணினால் தாய்க்குலத்தின் நிலை மிக மோசமாயிருந்துவருகிறது.

கூடியவரை 1000, 3000 ஜனங்களைக்கொண்ட பகுதிகளுக்காவது அல்லது குறைந்தஅளவு 20 சதுர மைலுக்கு ஒன்றுவிதமாவது பிரசவவிடுதியும், அதற்கு மத்தியமான ஓரிடத்தில் ஒரு லேடி டாக்டரும் சர்க்கார் செலவில் கார் வசதியுடன் சென்று முக்கியமான ஆயுதக்கேஸ்கள் போன்ற பிரசவ கேஸ்களைக் கவனிக்கவும் ஏற்பாடு செய்யாமலிருப்பது வருந்தத்தக்கதுமாகும். நினைக்கலாம் இதுவரையில் அவர்கள் எப்படி பிரசவித்து இத்தனைகோடி மக்களை ஈன்றெடுத்தார்களென்று.

முன்னர் பண்டை நாளில், பெண்கள் கர்ப்பமாகி பிரசவகாலம் வரை சிலவேலைகள் செய்யும் பழக்கமிருந்து வந்தது. சமீப நவீன சாதனமாகிய நெல்மிஷின்போன்றவைகளால் சில வேலைகள் செய்யவேண்டிய அவசியமற்று விட்டது. தவிர சிலநடுத்தரகுடும்பங்கள் வேலை செய்யக் கூடிய நிலையின்றி வேலை செய்வதினின்றும் நீங்கியிருப்பதாலும் சுகப்பிரசவமின்றி அநேகமாக கஷ்டபிரசவங்களால் அவஸ்தைப்பட்டு பலர் உயிரிழந்தும், கொடுமைக்குள்ளாகியும், அந்த நிலையில் ஆண் டாக்டர்களே பிரசவ கேஸ்களுக்கு ஆயுதம் உபயோகித்து எடுக்கும் நிலையை மாற்றியமைக்கவும், பெரிய நகரங்களில் மட்டும் பிரசவ ஆஸ்பத்திரிகள் இருந்தால் போதுமா? கிராம மக்கள் இந்த வசதியைக்கூட அடையாமலிருப்பது பெரும் மானக் கேடல்லவா?

கர்ப்ப பெண்களுக்கும் பிரசவ விடுதிகள் ஆங்காங்கு ஏற்படுத்தவேண்டியது மிக மிக அவசியம். தவிர பிரசவ காலங்களில் சர்க்கார் பணிமனைகளில் வேலை செய்யும் பெண்களுக்கு பிரசவகாலத்திற்கு குறைந்தது ஒரு மாதத்திற்காவது சம்பளலீவும், பின்னர் 2, 3, மாதங்களுக்காவது சம்பளத்துடன் லீவும் அனுமதித்து குழந்தை வளர்ப்பு முறைகளை கையாள முடியாவிடினும் அதிக நர்சுகளும் அதிகமான லேடி டாக்டர்களையும் அதிகமாய் உண்டாக்க பிரத்யேக சலுகையில் துரிதமாய் செய்ய வேண்டியது அவசிய மல்லவா?

சட்டசபையில் பெண்களுக்காக அங்கம் வகிக்கும் தாய்மார்கள், அடிக்கடி பல பிரச்னைகளின் சிக்கலில் அறிவுரை கூறும் திருமதி. பீகம் அமிருதீன் போன்ற கல்வியறிவுடைய தாய்மார்கள் ஏன் இதுபோன்ற முக்யத்வம் வாய்ந்த பிரச்னைகளில் கவனம் செலுத்தி பெண்களின் விகிதாசாரம் சட்டசபைகளில் இடங்களும், உத்தியோகத்திலுள்ள சரிபகுதி விகிதாசார பாகத்தையும் கேட்டு தாய்க்குலத்தை உயர்த்த ஆவன செய்ய முற்படவில்லை. அதற்கு அறிவுவாய்ந்த பெண்ணினமில்லையென அச்சமா? பல பெண்மணிகள் உள்ளனர். இடதுகை எல்லா வேலைகளுக்கும் உபயோகப்படுமா எனும் முயற்சியின்மையை எண்ணாமல் தாய்க்குலப் பெண்களின் முக்கியமான பிரசவம் போன்ற காரியங்களுக்காகவாகிலும் பெண்களையே வைத்து ஆயுத கேஸ்கள் போன்றவைகளுக்காவது சிகிச்சை முறை செய்ய தங்களைப்போன்ற தாய்மார்கள் பெண்கள் தொகுதியில் நின்று பெண்களுக்காக போராட வேண்டியவர்கள் நீங்கள். ஆவன செய்வது கடமையாகும். கடமையை மறவாதீர்கள்!

திக்கற்ற ஏழைப் பெண்கள் தன் குழந்தைகளையும் மருத்துவ உதவியின்றி இறந்தபிறகு, அவர்கள் மருத்துவ வசதியின்றி இறப்பதால் அவஸ்தைப்படும்நிலை ஆண்களை பாதிக்கும் அளவு ஏற்படும், ஆண்களுக்கும் நல்லது. அவதிகள் குறையும். ஆவன செய்யுங்கள். ஆண்களும் இதுகளை மறுக்க முடியாது. தாய்க்குலம் தழைக்கும் தர்மம் நிலைக்கும். ஷி வேலைகளுக்கு அவ்வளவு பெண்மணிகள் கிடைக்கமாட்டார்கள் என அச்சமா?

—தொடரும்

திருவும் அ

(சொல்லேருழவன்)

★

அஹம்ப்ரஹ்மாஸ்மி—நானேகடவுள்என்று ப்ரஹ்ம சூத்திரம்கூறுகிறது இந்தஉரை சங்கரர்கருத்தைத் தழுவியது இது அத்வைதம்எனப்படும் வசிட்டாத்வைத மதமாகிய இராமாநுசர்கண்ட உரையில் மேற்கண்ட சூத்திரத்திற்கு மாறுபட்ட கருத்தொற்றுமைகாண்கிறது "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுரும்தானே. தமருகந்த தெப்பேர் மற்றப்பேர்" என்றபடி மனிதன்விரும்பிய உருவத்தில் கடவுள் அமைகிறார். மனிதன் அல்லது அடியார் இட்டபெயரை தன்னுடைய பெயராக ஏற்றுக் கொள்ளுகிறார் இதுவே இராமாநுசர்கருத்து மனிதனின்செயலே ஓர்அலாதி அவன்செய்யும் அற்புதங்கள் பலவாம் உதாரணமாக கல்லைச்செதுக்கி அதற்கு ஓர் பெயரிட்டு இதுகடவுள் என்பான். கடவுளும் வேறு விதியின்றி அதில்தான் இருப்பார். அதே கல்லில் மற்றொருபகுதியை அம்மிஎன்றால் மிளகாய் அரைக்கத் தயாராகஇருக்கும்! செம்பை உருக்கி வார்த்து கடவுள்என்றால், ஏன் என்கிறது. மிகுந்த செம்பில் தவலைபெய்தால் சோறுசமைக்கத் தயாராகிறது சங்கரா நானேகடவுள் என்பதற்கும், இராமானுசர், நம் சொற்படிகடவுள் ஆடுகின்றார் என்பதற்கும் வார்த்தைகள்தான்பேதம். கருத்தில் ஒற்றுமை இருக்கிறது.

உருவமாக இருந்தால் தன்பெயரால் சுயநல வஞ்சக கூட்டம் பிழைத்துக்கொண்டு பாமரமக்களை ஏமாற்ற முடிகிறது என்றுதான் கடவுள்நான் அறிவுமயமாகவே இருந்துவிடுகிறேன் என்று அறிவில் அதிகநாட்டங் கொண்டுள்ளார். அறிவையாரும் திருடமுடியாதல்லவா? கடவுள் அழியாமல் இருப்பதற்காகவே அறிவில்ஒளிந்து இருக்கிறார்என்பது தெளிவு. இதைதான் "வாலறிவன்" என்று பொய்யாமொழியாரும் அறிவான தெய்வமே என்று தாயுமானவரும் அறிவினுக்கறிவாய் என்று கம்பரும் *தத்தாரி ஆகமபதவி (அறிவே உன்னை வணங்குகிறேன்) என்று புத்தர்பெருமானும் கூறிப் போந்தனர்.

'திருவேறு! தெள்ளியர் ஆதலும்வேறு!' என்பது முடிந்த கருத்தல்ல. பணம் வேறு பணக்காரன் வேறு என்பது போல, இவை இரண்டும் பிரிந்திருந்தால் பயன் இராது. ஒன்று கூடியே செயல் ஆற்றவேண்டும். இதில் தர்க்க சாத்திரத்தை உபயோகித்துப் பிரித்தால் "நெய்க்குத் தொன்னை ஆதரவா? தொன்னைக்கு நெய் ஆதரவா?" என்று கவிழ்த்துப் பார்த்து ஏமாந்த கற்றறி மூடனின் கதைபோலத்தான் ஆகும்.

—தொடரும்.

*பாலிமொழி.

...போக்குவரத்து ...ளர் விபரங்கள்.

மோட்டார் சம்மந்தப்பட்ட தொழிலாளர்களுக்காக சென்னை சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற அறிக்கை:—

1948 ஏப்ரல் 29உய அறிக்கையின்படி மாகாணத்தில் போக்குவரத்துபஸ்கள் வைத்துள்ள கம்பெனிகள் 161 ஷிகம்பெனிகள் புள்ளி விபரம் கிடைத்துள்ள கம்பெனிகள் 83. இன்னும் 78 கம்பெனிகளும் பின்னர் ஏதாவது ஏற்பட்டிருக்கிற புள்ளிவிபரங்களும் பின்னர் தொடர்ந்து வரும். அந்த கிடைத்த விபரக் கணக்குப்படி 2751 மோட்டார் போக்குவரத்து பஸ்களும், 82 பப்ளிக்கன்வினியன்ஸ் லாரிகளுமிருக்கிறது.

மொத்த புள்ளி விபரம் சற்று சுமாரான கணக்கு 16313 இதில் கீழ்க்கண்ட விபரப்படி டிரைவர்கள் முதலானோர்களின் விபரம் தரப்பட்டிருக்கிறது. பாக்கியுள்ள 78 கம்பெனிகளின் கணக்குகளும், 1948 ஏப்ரலுக்கு பின்னர் புள்ளி விபரங்களும், மொத்த பஸ்கள், லாரிகள், எண்டார்சுமெண்ட் டிரைவர்களும் மற்றைய விபரங்களும் பின்னர் தொடர்ந்து வெளியிடப்படும். ஆங்காங்கு மோட்டார் தொழில் சம்மந்தமான விஷயங்களை எழுதியனுப்பினல் பிரசுரிக்கப்படும். ஷியார்கள் கொடுத்துள்ள கணக்கு மொத்தம் 16313. தனியே பிரித்த கணக்குப்படி பார்த்தால் 15446 வருகிறது 867 புள்ளி பிசகு. ஏற்கனவே கணக்கில் விடப்பட்டிருக்கிறது.

★

— மகாபாரதம் — 3-ம் பக்கத் தொடர்ச்சி

வியாசரே பாரதநூலை வடவர்களுக்கே உரியதொரு நூல் என்றும் அதை அவர்களே போற்றவேண்டுமென்றும் அதன் கருத்துக்ளையாவும் அவர்களுக்கே யுகந்தன என்றும் ஏனைத்தென்னாட்டவர்க்கு அந்நூலும் அதன்கருத்துக்களும் சிறிதும் உடன்பாடுள்ளவை அல்ல என்றும் பிரித்துக்கூறியதை வில்லி "ஒரு கோடிபூதே வரும் கைதொழும் கோவை" என்றதொடரால் விளக்குகிறார் என்பது விளங்குகிறது.

[தொடரும்]

ஆசிரியர் குறிப்பு:— மேலே கண்ட செய்யுளைக் கண்ட திரு. வெள்ளிவீதியார் என்ற சங்கப்புலவர்,

"செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லா தாரில்"

என பாரதநூலை ஏனைய (திராவிடர்க்கு) தென்னாட்டவர்க்குரிய நூலாக கொள்ளாதது விளங்கற்பாலது. ★

K. ரெத்தினசாமி.
தலைவர், நேதாஜி வாலிபர் சங்கம், ஜெயங்கொண்டம்.

அன்புடையீர்! வணக்கம்.

"பொய்யாமொழி" இதழ் கண்டு மகிழ்ச்சி. எத்துறையிலும் மிகச்சீர்கேடடைந்திருக்கும் நம் தாலூகாவைச் சீர்திருத்தும் தொண்டனாக பொய்யாமொழி விளங்கும் என எண்ணுகிறோம்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

தாங்கள் நீடூழிவாழ்ந்து "பொய்யாமொழி" எனும் இதழ் வாயிலாக பொதுமக்கள் நல்வழி வாழ உதவ கடவுளை வேண்டுகிறோம்.

செய்திகள்.

ஜெயங்கொண்டம் வீவர்ஸ் சொசைட்டியில் 21—9—50 ஷிசங்க தலைவர் திரு. சாமிநாத செட்டியார் தலைமையில் நடந்த சங்க கூட்டத்தில் நிறைவேறிய 9 வது தீர்மானம்:

பாவு செய்யும் தொழிலாளர்களுக்கு மாத சம்பளம் கிடையாது. அன்றாடம் செய்தவேலைக்குத் தகுந்தபடி அவ்வப்போது கூலி கொடுப்பதுதான் தொன்றுதொட்டு வழக்கம். ஷியார்களுக்கு சதாகாலமும் நிரந்தரமாய் வேலை கிடைப்பது அரிது. 7, 8 பேர்கள் சேர்ந்து சில மணி நேரத்திற்குள் பாவு செய்து வேலை முடித்து விட்டு கூலியை பெற்று போய்விடுவார்கள். அவர்களுக்கு ஷாப் சட்டத்தை புகுத்தினல் அது கூலிநெசவாளர்களை பாதிக்கும் ஆகையால் ஷியார்களை ஷாப் சட்டத்திலிருந்து விலக்களிக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கனம். டிப்டி-ரிஜிஸ்டார் அவர்கள் மூலம் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கிறது

16-10-50 (ஒ-ம்) காரியதரிசி. V. பாலசுப்ரமணியன்.

— வறுமையில் வள்ளுவர் — 3ம் பக்க தொடர்ச்சி.

அவன். இதுபோன்ற நிகழ்ச்சியைப் படம் பிடித்துத் தருகின்றது இந்தக்குறள்.

இன்றும் வருவது கொல்லோ? நெருநலுங்
கொன்றது போலும் நிரப்பு.

[நெருநலும்—நேற்றும் நிரப்பு—வறுமை.]

'இன்றும்' எனும் சொல் ஆழ்ந்த பொருளைத்தருகின்றதாக அமைகிறது நேற்றுவந்த வறுமையே! நீ (எனது அருமை மனைவியைக் கொன்றாய்) இன்றும் வருவாயோ? என்று வருந்துகிறது வறுமைப்பட்ட உள்ளம்.

வறுமையைப் போலத் துன்பம் தருவது வேறு எதுவாக இருக்கமுடியும்? என்று ஆராய்ந்து உவமைகூற வேறுஇல்லாமையால், வறுமையைப் போலத் துன்பம் தருவது வறுமைதான் என்ற முடிவுக்கே வந்துவிடுகிறார் ஆசிரியர் வள்ளுவர். வறுமையைப்பற்றி "நல்குரவு" என்னும் தலைப்பில் அவர் கூறியிருக்கும் பத்து குறள் மணிகளும், இப்போதைய பாட்டாளி உலகின் பரிதாப நிலையை விவரிக்கும் காட்சியாகும் ஆனாலும் வள்ளுவர் கண்ட மற்றெல்லாத் துறைகளும் சீரடைந்தால்தானே 'நல்குரவு' என்னும் உயிர் கொல்லியும் நாட்டை விட்டகலும். அதுவரையில் ஒவ்வொரு வறுமையாளனும் "இன்றும் வருவாயோ?" என்று துன்பத்தை ஏக்கத்துடன் வரவேற்பதைவிட வேறுவழி என்ன?

பட்டினி...! பசிக்கொடுமை...!!

கீழப்பழுவூர் செப்-11

இவ்வூரில் ரேஷன்கடைகளில் 8—10—50ல் ஆரம்பமான வாரத்திற்கு இதுவரை அரிசி சப்ளை செய்யப்படவில்லை. என்ன காரணமென்று தெரியவில்லை. மக்கள் அரிசிகிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக அரிசி சப்ளை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

— G. பண்டரிநாதன்.

ஃ ஃ ஃ

விருந்தோபசாரம்

—:—

ஜெயங்கொண்டம், செப்-16

15-10-50ல் பிற்பகல் 2மணிக்கு ஜெயங்கொண்டம் திரு காளிதாஸ் B. A. அவர்கள் தலைமையில், மாற்றலாகி போகும் தாலூகா சப்ளை ஆபீசர் திரு திருக்கைவேல் செட்டியார் அவர்களுக்கு உணவு பங்கீட்டு வியாபாரிகளால் ஓர் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

அ. இ. காதர்கான் அவர்கள், T. S. O. அவர்களுக்கு மலர் மாலையணிவித்து அன்னாரின் குணாதிசயங்களைப் பாராட்டி பேசினார். பின் திரு. கிருஷ்ணமூர்த்தி அய்யர் நன்றி கூற தேநீர் விருந்து முடிவுற்றது.

ந-நி

ஃ ஃ ஃ

15-10-50 இரவு இவ்வூர் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் திரு. A. ஆரோக்கியசாமி B. A., B. T.. அவர்கள் தன் திருமணத்தை முன்னிட்டு பிரமுகர்களுக்கு விருந்து அளித்தார். பிரமுகர்கள் சார்பில் பொய்யாமொழி ஆசிரியர் திரு. M. பாஸ்கரன் அவர்கள் திருமண வாழ்த்து கூறினார். (ந-நி)

ஃ ஃ ஃ

ரூ. 200. ஜாமீன் வழக்கு தள்ளுபடி!

—:—

கண்டியூர் செப், 10

இவ்வூர் தி. க். தலைவர், V. S. தர்மராசு, மற்றும் நான்கு தோழர்கள் மீதும் திருவாதி போலீசாரால் ஜாமீன் வழக்கு தஞ்சை சப். டிவிஷனல் கோர்ட்டில் 107 படி தொடரப்பட்டு தலைக்கு 2 வருடத்திற்கு ரூ. 200 ஜாமீன் வாங்கப்பட்ட வழக்கு 6—10—50ல் தஞ்சை செஷன்ஸ் கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்டது. (ஒ-நி)

மோட்டார் தொழி...

தொழில் பிரிவினர்...

—:—

(7-ம் பக்கம் முதல்பத்தி தொடர்ச்சி.)

1.	Apprentices.	தொழில் பழகுபவர்	41
2.	Drivers	டிரைவர்கள்	4067
3.	Counductors	கண்டக்டர்கள்	3701
4.	Inspectors	இன்ஸ்பெக்டர்கள் செக்கிங்	872
5.	Time Keeper	நேரம் குறிப்பவர்கள்	152
6.	Booking Clerk	டிக்கட் கொடுப்பவர்கள்	142
7.	Foreman	போர்மென்	44
8.	Mechanic	மெக்கானிக்	314
9.	Asst. Mechanic	உதவி மெக்கானிக்	138
10.	Fitter	பிட்டர்	581
11.	Asst. Fitter	உதவி பிட்டர்	355
12.	Cleaner	கிளீனர்	1813
13.	Welder	வெல்டர்	198
14.	Blacksmith	கருமான் or கொல்லர்	314
15.	Corpenter	தச்சுவேலை செய்பவர்	185
16.	Electricians	எலெக்டரிஷன்ஸ்	153
17.	Suprevisor.	சூப்ரவைசர்	459
18.	Charcoal Grademan	கரிபோடுபவர்	226
19.	Liner.	குஷன் வேலைசெய்பவர்	48
20.	Tailor	தையல் வேலை செய்பவர்	14
21.	Tinker	ஈயப்பத்து வைப்பவர்	106
22.	Painter	பெயின்டர்	87
23.	Tireman	டயர்மென்	45
24.	Valcunizer	வல்கனைசர்	32
25.	Turner	டர்னர்	30
26.	Moulder	மௌல்டர்	11
27.	Hamerman	ஹாமர்மென்	19
28.	Battryman	பாட்டரிமென்	3
29.	Greaser	கிரீசர்	29
30.	Cooly	கூலி	37
31.	Watchman	காவல்காரர்	236
32.	Accountant	கணக்கர்	73
33.	Clerk	குமாஸ்தா	538
34.	Peon	வேலைக்காரர்கள்	231
35.	Cashier	பொருள்காப்பாளர்	60
36.	Manager	மானேஜர்	54
37.	Sweeper	ஸ்விப்பர்	38
		மொத்தம்	15446

(தொடரும்)

★ கண்கவர் வனப்புடைய கைத்தறி ஆடைகள்..!! ★

நேர்த்தியான ரகங்கள்! ★ விலை நயம்! ★ 80, 100 நெ. கலர்கள் &
நீடித்த உழைப்பு!! ★ என்ன? ★ அசல் வெள்ளி சரிகை
நவ நாகரீகத்திற் கேற்ப ★ ★ உத்திரவாத முடைய ★
அழகிய பார்டர்கள்! ★ எங்கே? ★ சேலைகள் வேட்டிகள்.

ஜெயங்கொண்டசோழபுரம்
★ கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனை சங்கத்தில் கிடைக்கும்.! ★

கூட்டுறவை ஆதரித்து தொழில் நலம் பெருக்குங்கள்.!!

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketcheri Street, Jayankondacholapuram.